Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 119/2023** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **பாபு (உதவி கிளை மேலாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜர்**

**21.11.2025**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் சௌத் இந்தியன் வங்கி அருப்புக்கோட்டை கிளையில் உதவி கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது வங்கியில் சுகந்தி என்பவர் வங்கி கணக்கு எண். 0005053000019545 பராமரித்து வருகிறார். மேற்படி வங்கி கணக்கில் 14.12.2022 ம் தேதி ரூபாய் 1,00,000/–த்திற்கான ஈகுவிட்டாஸ் வங்கியின் காசோலை எண். 000035 செலுத்தினார். மேற்படி காசோலையானது 15.12.2022 ம் தேதி போதுமான பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. மீண்டும் மேற்படி காசோலையானது 13.02.2023 ம் தேதி வசூலுக்காக செலுத்தப்பட்டது. மேற்படி காசோலை 14.02.2023 ம் தேதி மீண்டும் போதுமான அளவு பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான 15.12.2022 மற்றும் 14.02.2023 ம் தேதியிட்ட குறிப்பாணையை தற்போது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேலும் மேற்படி பரிவர்த்தனைகளை காண்பிக்கும் 30.11.2022 முதல் 15.12.2022 வரையிலான மேற்படி சுகந்தியின் வங்கி

பரிவர்த்தனை கணக்கு மற்றும் 10.02.2023 முதல் 14.02.2023 தேதி வரையிலான மேற்படி சுகந்தியின் வங்கி பரிவர்த்தனை கணக்குகளை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ( **15.12.2022 தேதியிட்ட குறிப்பாணையின் சான்றிட்ட நகல் Ex–X1 (சா.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( 14.02.2023 ம் தேதியிட்ட குறிப்பாணையின் சான்றிட்ட நகல் Ex–X2 (சா.சா.ஆ.2) ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( 30.11.2022 முதல் 15.12.2022 வரையிலான மற்றும் 10.02.2023 முதல் 14.02.2023 தேதி வரையிலான சுகந்தியின் வங்கி பரிவர்த்தனை கணக்கின் சான்றிட்ட நகல் Ex–X3 (சா.சா.ஆ.3) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** (மேற்படி ஆவணங்கள் பிரிவு 65–B சான்றிதழ் இல்லாமல் குறியீடு செய்யப்படுகிறது என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் எழுப்பிய ஆட்சேபணைக்கு உட்பட்டு Ex–X1 முதல் Ex–X3 குறியீடு செய்யப்படுகிறது)

2. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புசாஆ.3 ல் ரூபாய் 2,00,000/–த்திற்கான குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திருப்பப்பட்ட குறிப்பாணையில் ரூபாய் 2,00,000/– என்று பொதுவாக பிழை ஏற்பட வாய்ப்பில்லை. மேற்படி ஆவணத்தில் வங்கியின் முத்திரை மட்டும் தான் இருக்கிறது. எந்தவொரு கையெழுத்தும் இல்லாத காரணத்தினால் எந்த காரணத்திற்காக ரூபாய் 2,00,000/– என்று மாற்றி கூறப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை. நான் மேலே குறிப்பிட்ட காசோலை எண். 000035 க்கான இரண்டு குறிப்பாணைகளையும் நான் ஆவணங்களை பரிசீலனை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன், அவை தான் சரியான ஆவணங்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பொதுவாக காசோலையை வசூலுக்கு செலுத்தும் போது திருப்பப்பட்டால் வங்கியில் நாங்கள் பராமரித்து வரும் பதிவேட்டில் கையொப்பம் செய்து தான் திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையை பெற இயலும் என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கான அழைப்பாணை எனக்கு கொடுக்கவில்லை அதனால் நான் தற்போது அதனை எடுத்து

வரவில்லை. எங்கள் வங்கியின் அருப்புக்கோட்டை கிளையின் வங்கி எண். 0005 என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புசாஆ.2, மற்றும் புசாஆ.3 ல் மேற்படி வங்கி எண் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புசாஆ.1 காசோலையில் உள்ள MICR எண் 625756011 ஆனது புசாஆ.2 ல் sort code என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புசாஆ.3 ல் மேற்படி MICR எண் தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து இல்லாத காரணத்தினால் வங்கியில் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் தற்போது தாக்கல் செய்துள்ள Ex–X1, Ex–X2 ஆவணங்களில் MICR எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. புசாஆ.2 ல் சுகந்தியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணமானது Clearing House மூலமாக வழங்கப்பட்ட குறிப்பாணை அதனால் மேற்படி ஆவணத்தில் பெயர் குறிப்பிடமாட்டார்கள். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**